**செய்தி வெளியீடு எண்: 01/07/2021** **07.07.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் நாளை (08.07.2021) முதல் காலை 05:30 மணி முதல் தொடங்குகின்றன.**
**நெரிசல்மிகு நேர சேவையும் (Peak hour services) அதிகரிக்கப்படுகிறது**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 21.06.2021 முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மீண்டும் தொடங்கியது.

சென்னை மெட்ரோ இரயில் பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும், வசதிக்காகவும் நாளை (08.07.2021) முதல் மெட்ரோ இரயில் சேவைகள் காலை காலை 05:30 மணி முதல் இரவு 09:00 மணி வரை இயக்கப்படவுள்ளன. மெட்ரோ இரயில் சேவைகள் நெரிசல்மிகு நேரங்களில் (Peak Hours) காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் தலா ஒரு மணிநேரம் நீட்டிக்கப்பட்டு 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். மற்ற நேரங்களில் (Non-peak Hours) 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

**கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது.
- மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியைக் கண்காணிப்பதற்காகத் தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த “X” குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்தக் குறியீடுகளை பின்பற்றி அமருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அனைத்து பயணிகளும் முகக்கவசத்தை சரியாக அணிந்துள்ளனரா என்பதை கண்காணிக்க குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது.

21.06.2021 முதல் 06.07.2021 வரை முகக்கவசத்தை அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 34 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.6800 வசூலிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**